# சிரேஸ்ட இடை நிலை மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் வெகுசனத்தொடர்புசாதனங்கள்

# (Ipact of Mass Medias on Educational socialization of senior secondary students)

**Mr. Shandru Mariyadas (B.Ed Hons), Lecturer (Probationary)**
Department of Education And Childcare, Faculty of Arts And Culture,
Eastern University, Sri Lanka.
Chandrumariyadas@Yahoo.Com


## ❖ ஆய்வுச்சுருக்கம் (abstract)

சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கற் செயற்பாடுகளில் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் கற்றல் மற்றும் கற்றல்சாரா செயற்பாடுகளின் பங்களிப்பானது எவ்வாறானதாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை இனங்காண்பதற்காக மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. கற்றல் கற்பித்தல் முன்னெடுப்புக்களில் தற்காலத்தில் பங்களிப்புச் செய்யும் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் குறிப்பாக சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டில் தொடர்புசாதனப் பிரயோகங்களின் பாவனை மற்றும் மாணவர்களின் நடத்தைகளில் ஏற்படுத்தும் மாற்றங்கள், நடத்தை மாற்றத்தினால் ஏற்படுத்தும் அறை கூவல்கள் என்பவற்றினை ஆராய்வதற்காக கற்றல் கற்பித்தலில் வெகுசனத்தொடர்பு சாதனங்களின் செயற்பாடுகள் பற்றி அறியப்படுவது அவசியமானதாகும். கல்விச் சமூகமயமாக்கலில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் மாணவர்களுக்கு சாதகமாக இருக்கின்ற வேளையில் உரிய முறையில் கண்காணிப்பின்மை, பயன்படுத்துவதில் தப்பான வழிகளில் செல்லல் போன்ற காரணங்களினால் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றது. ஆசிரியர்களினுடைய அர்ப்பணிப்பற்ற கற்பித்தல் செயற்பாடுகற்பித்தலில் வெகுசனத்தொடர்பு சாதனங்களின் பங்காற்றுகை வெகுசனத்தொடர்பு சாதனங்களின் கற்றல் இடறுகைகள் என்பனவற்றிற்கான தீர்வினை வழங்குவதன் மூலம் வெகுசனகற்றலின் மூலமான சிறந்தகற்றல் முன்னேற்றங்களைப் பெறமுடியும். கற்றலுக்காக புதிய தொழிநுட்பத்துடனான கல்விச்செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமானது எனினும் பிரயோகிக்கப்படும் விடயத்தினுடைய தாற்பரியத்தினை தெளிவாக புரிந்து பயன்படுத்தக்கூடிய திறனை குறிப்பிட்ட பிரதேசத்தின் மாணவர்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதனைக் கண்டறிந்த பெற்றோர்களும் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களிடையே அதிகமாகக் காணப்படுகின்ற பிடிவாதம், முன்கோபம், தர்க்கம் புரிதல் என்னும் மனவெழுச்சிகளால் குறித்த விடயத்தினைச் சுட்டிக்காட்டி நெறிப்படுத்த தயங்கும் நிலை காணப்படுகின்றது. பாடசாலையில் கட்டுப்பாடுகளை வழங்குகின்ற போதும் மாணவர்கள் வீட்டுச்சூழலில் இதனை தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதனால் குறித்த மாணவர்களின் கல்வித்தரமானது வீழ்ச்சிப்போக்கினைக் கொண்டிருப்பதுடன் நடத்தை மாற்றங்கள் சமூகத்திற்கு ஒவ்வாத வடிவில் உருவாக்கப்பட்டுக் கொண்டுள்ளமை கண்கூடு. இந்த வகையில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் கல்வித்தரத்தினையும் நடத்தை மாற்றத்தினையும் பெருமளவு மாற்றமடையச் செய்து வருவதுடன் இத்தகைய தொடர்பு சாதனங்கள் குறித்த தெளிவான அறிவின்றி மாணவர்கள் அதிக பயன்பாட்டில் ஈடுபடுவதும் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் பயன்படுத்துகின்ற மாணவன் மற்றைய மாணவனையும் தூண்டி இந்த வெகுசனத்தொடர்பு சாதனங்களுள் உள்வாங்கிக் கொள்வதால் இளம் மாணவ சமூகம் தம் இலக்கினையும் கல்வியையும் சிறப்பாக சீரிய நடத்தைகளையும் தவற விடும் இக்கட்டான நிலையினின்று விடுபட வேண்டும் என்ற நோக்குடன் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.



## ❖ திறவுச் சொற்கள் (keywords)

**சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள், கல்விச் சமூகமயமாக்கல், வெகுசனத்தொடர்பு சாதனங்கள்**

## 1.1 ஆய்வறிமுகம் (introduction)

'மனிதன் ஒரு சமூக விலங்கு' என்ற August comte இன் கருத்துப்படி மனிதன் தனித்துவாழ முடியாது. சமூக உறுப்பினர்களின் உறவாடல்கள் இடைவினைகள் மூலமே இயக்கச்செயன்முறை இடம்பெறுகின்றது. இத்தொடர்பாடல் இன்றைய நிலையில் பல பரிமாணங்களைப் பெற்று மின்னல் வேகத்தில் இடம்பெறுகின்றது. இன்றைய சூழலில் வெகுசனதொடர்பு சாதனங்கள் இல்லாத உலகை எம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு வெகுசனதொடர்பு சாதனங்கள் தகவல் தொழிநுட்பத்தின் ஊக்குவிப்புடன் முன்னணியில் செயற்பட்டு வருகின்றதுடன் இலாப நோக்கினைக் கருத்தில் கொண்டு பண்பாட்டுச்சந்தையிலும் உலகளாவிய சந்தையிலும் போட்டியிடக்கூடிய விற்பனைப்பண்டமாகத் திகழ்கின்றன. **வெகுசனத்தொடர்பு சாதனங்கள்** எனும்போது மரபுமுறையினின்று மாறுபட்ட நவீனத்துவங்களை உள்வாங்கிக்கொண்டதாக தகவல் பரிமாற்றத்தினை துரிதமாக பரிமாற்றம் செய்ய உதவுகின்றது. வெகுசனத்தொடர்பு சாதனங்களாக தொலைக்காட்சி கணினி கைத்தொலைபேசி என்பனவற்றையும் குறிப்பிடலாம். இன்றைய மாற்றங்களுக்கு ஏற்ப ஊடகங்களின் பங்களிப்பானது கல்வித்துறையின் செயற்பாடுகளுடன் இணைந்த போக்கினைகொண்டள்ளமை கண்கூடு. இதிலே மாணவ வாழ்வின் முக்கிய கட்டமாகிய 15-19 வயதுப்பருவத்தினர் சிரேஸ்ட இடைநிலை பிரிவினுள் அடங்குகின்றனர். புதுமைகளை உள்ளவாங்கிக் கொள்வதிலும் புதுமைகளைப் படைப்பதிலும் ஆர்வம் கொண்ட வயதுப்பிரிவினராகிய இவர்கள் குடும்பம் மற்றும் குடும்ப உறுப்பினர்களை விடவும் அதிக ஆர்வத்தினை பாடசாலை சகபாடிகள் சமூகம் என்ற காரணிகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவோராக உள்ளனர்.

## 1.2. ஆய்வின் பின்னணி (backround of the study)

உலகம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மனிதன் தொடர்பாடலின் ஊடே வாழ்கிறான். ஏனெனில் காலமாற்றத்துக்கேற்ப அனைத்து துறைகளும் தொழிநுட்பத்துடன் இணைவு பெற்றுச்செல்கின்ற நிலையில் கல்வியிலும் இதன் பங்களிப்பு அவசியமாகியுள்ளது. இந்நிலையில் வெகுசனதொடர்பு சாதனங்கள் என்ற வகையினுள் தொலைக்காட்சி, கைத்தொலைபேசி, கணினி என்பன இன்றைய நிலையில்வாழ்வின் இன்றியமையாத பங்காளர்களாகியுள்ளதுடன் மாணவர்களின் கல்வியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குபவனவாகவும் உள்ளன.

பெற்றோர்களின் நிலைப்பாட்டினை நோக்கின் வெகுசனத்தொடர்பு சாதனப் பயன்பாட்டினை நாகரீக நோக்குடன் பயன்படுத்தி அதனை அத்தியாவசியத்தேவை என எண்ணுமளவிற்கு செயற்படுகின்றனர். குறிப்பாக தொலைக்காட்சிப்பாவனை காரணமாக மாணவர்கள் தம் கல்வியை வீட்டில் தொடர முடியாத நிலை ஏற்படுகின்றது. இன்றைய நவநாகரீகத்திற்கு ஏற்ப தங்கள் பிள்ளைகளும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் பிள்ளைகள் கேட்பவற்றினை வாங்கி வழங்குவதுடன் தத்தமது பிள்ளைகளுக்கு கணினி கைத்தொலைபேசி தொடர்பில் அனைத்து விடயங்களும் தெரியும் என்ற பெருமை பாராட்டுபவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் மாணவர்கள் தமக்குக் கிடைக்கும் வெகுசனத்தொடர்பு சாதனங்களை எந்தளவிற்கு கல்விக்காகவும், அறிவிற்காகவும், உபயோகமான தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர் என்பதனை அவதானிக்கத் தவறுவதுடன் அவர்களுக்கு வெகுசனத்தொடர்பு சாதனங்களான கைத்தொலைபேசி, கணினி, இணையம் தொடர்பான அறிவு குறைவாகவும் கவனிப்பதற்கான போதிய நேர அவகாசமின்மை என்பனவும் மாணவர்களின் தவறான செயற்பாடுகளை கட்டவிழ்த்து விடுகின்றன.

வெகுசனத்தொடர்பு சாதனங்கள் குறிப்பாக இளம்பராயத்தினரைக் கவரும் நோக்கில் பல வசதிகளை அம்சங்களை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு பல்வேறுபட்ட பரிணாமங்களில் கவர்ச்சிகரமானதாகவும், விலை குறைவாகவும் இலகுவான கையாள்கைக்கு உட்படுத்தக்கூடியதாகவும் காணப்படுவதுடன் மிக இலகுவாக சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் வயதுப்பிரிவினரை தன்பால் ஈர்த்துக் கொள்ளக்கூடிய தன்மைகளையும் விளம்பர நிலையையும் கொண்டதாய் உள்ளன. சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் என்ற விடயம் முன்வைக்கப்படக் காரணம் என்னவெனில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் தொடர்பான அறிவும், ஏனைய நவீனத்துவம் சார் அறிவும் இப்பருவத்தினரையே இலகுவாக ஈர்த்துக்கொள்கின்ற உள்ளடக்கங்களைக் கொண்டதாக உருவாக்கப்படுவதுடன் இப்பருவத்தினரிடையே காணப்படும் புதிய விடயங்களைத் தேடுதல் என்ற மனோநிலையும் இதற்கான காரணிகளாகின்றன. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று அனைத்து விடயங்களுக்கும் சாதக, பாதக பக்கங்கள் காணப்படுகின்றன. முதலில் சாதகமான நோக்குடன் ஆரம்பிக்கப்படும் இச்சாதனப் பயன்பாடானது தொடர்ந்தும் மாணவர்களின் புலன் உணர்வுகளைத் தம் வசப்படுத்தி அவர்களின் வாழ்க்கை இலக்கினை மழுங்கடித்து நேரவிரயங்களை ஏற்படுத்துவதுடன் நடத்தை மாற்றங்களையும், கல்வித்தரத்தில் வீழ்ச்சிப்போக்கினையும் ஏற்படுத்தி தம் தொழிநுட்ப உலகினுள் முற்றும் அடிமைப்படுத்திக் கொள்கின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் இந்த பருவ மாணவர்களிடையே வெகுசனத்தொடர்பு சாதனங்களின் அதிகரித்த பாவனையானது அவர்களின் சமூகம், பாடசாலை, தனியாள், சூழலில் நடத்தை மாற்றங்களையும் ஒழுக்கமீறுகைகளையும் ஏற்படுத்துகின்றன.

## 1.3. ஆய்வு பிரச்சினை (problems of the study)

மனிதனின் அபரீதமான அறிவியல் கண்டுபிடிப்பானது மனித சமூகத்தினுடைய ஒழுக்கம்இ விழுமியம்இ கலாசாரம், நெறிமுறைகள, தொழில், கல்வி, பண்பாடு எனும் இன்னோரன்ன விடயங்களினை அந்நியப்படுத்தும் தவறான வழிநடத்தலுக்கு இட்டுச்செல்கின்றது. சிரேஸ்ட இடைநிலை எனும்போது (15-18 வயதிற்குட்பட்ட) பருவத்தினர் மீது வெகுசனத்தொடர்பு சாதனங்கள் பாரியளவு செல்வாக்கினைச் செலுத்தி வருவதனால் இப்பிரதேசம் கல்வித்தரத்தில் பின்னடைவினைச் சந்தித்த வண்ணம் உள்ளதுடன் எதிர்மறை மாற்றங்களையும் ஏற்படுத்துவதாக உள்ளன. ஆய்வுப்பிரதேசமானது நகரை அண்மித்து இருப்பதால் நாகரீகச்செல்நெறியாகக் கருதப்படுகின்ற வெகுசனத்தொடர்பு சாதனங்களின் பயன்பாடும், தேவையும் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றநிலை காணப்படுகின்றது. குறிப்பாக அனைவராலும் விரும்பப்படுவனவாகக் காணப்படுகின்ற இவற்றினால் மாணவர்களின் வாழ்க்கை கல்வி என்பன பாரியளவில் தாக்கத்தினை எதிர்கொள்கின்ற சூழலானது இங்கு உருவாகின்றது. தொழிநுட்ப விருத்திக்கேற்ப தாங்களும் விருத்தியடைய வேண்டும் என எண்ணும் மனோநிலை விடயத்தின் சாதக பாதக விளைவுகளைக் கவனத்திற் கொள்ளாமல் அளவுக்கு அதிகமாக வெகுசனதொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திட தூண்டியாகச் செயற்படுகின்றது. இந்நிலையில் அதிகம் பாதிப்பினை எதிர்கொள்வோராகக் கட்டிளமைப் பருவத்தினர் (15-18 வயதினர்) அதிக பாதிப்பினை எதிர்கொள்கின்றனர். பாடசாலையை விட்டு வீடு திரும்பியதும் தொலைக்காட்சி பாவனை, இணையம் மூலமான தவறான விடயங்களில் ஈடுபடல், கணினியில் அதிகநேரம் செலவிடல் (வன்முறையுடனான விளையாட்டுக்களினால் பிறழ்வு நடத்தைகள்) என்பனவும் சில எடுத்துக்காட்டுகளாகும். அதாவது நிலைமாறும் பருவமான இக்கால கட்டத்தினுள் சகபாடிக்குழுக்களின் செல்வாக்கின் காரணமாக வெகுசனத்தொடர்பு சாதனங்களின் பயன்படுத்துகை அதிகரிப்பதுடன் அதன் பாதக விடயப்பரப்பினுள்ளே நுழைந்து தவறான விடயங்களைப் பார்வையிடல் பதிவிறக்கம் செய்தல் ஏனைய நண்பர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பதல் என தொடர்ந்தும் செல்லும் மாயவலையினுள் அகப்பட்டு வாழ்வின் எதிர்காலத்தினைத் தீர்மானிக்கின்ற குறித்த காலத்தினை அசட்டை செய்து தவற விடுகின்றமையால் தம் எதிர்காலத்தினை சிதைத்துக் கொள்கின்றனர்.

### 1.4. ஆய்விற்கான நியாயம்

இணையத்தின் வருகை தொலைக்காட்சி, கைத்தொலைபேசி என்பன சமூகத்தின் பொருள்சார் நிலைமையும் பொருள்சாரா நிலைமையும் மீள் வடிவமைக்கும் நிலை காணப்படுவதுடன் இவற்றினூடே பண்பாடும், சமூக அமைப்பும், குடும்பம், கல்வி, அரசு, பொருளாதாரம் போன்றவற்றில் தாக்கங்களும் மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. நகராக்கமானது கிராமிய வாழ்வினையும் மாற்றியமைத்துள்ளது. இந்நிலையில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் மனித ஒழுக்கத்திற்கு மாறான நடத்தைகள் கொலை, கொள்ளை, விபச்சாரம், இனமதமொழி அழிப்புக்கள்இ நடைமுறைக்கு ஒவ்வாத கலாசாரம், பண்பாட்டுச்சீரழிவு என்பவற்றுக்கு ஏதுக்களாகின்றன. மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உதவும்படி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட தொழிநுட்பம் இன்று வெகுசனத்தொடர்பு சாதனங்கள் என்ற வகைப்பாட்டினூடே கற்றல் செயற்பாட்டிற்கு ஏற்ப நிலைப்பாட்டினை விட்டகன்று செல்லும் தன்மையையும் வரம்புமீறிய செயற்பாட்டினால் மாணவர்களின் விழுமிய நடத்தைக்கோலங்கள் மற்றும் கல்வியின் தர நிலையில் பின்னடைவினை ஏற்படுத்துவனவாகவும் செயற்படுத்துவதுடன் உளச்சங்கடங்கள், நடத்தைப்பிறழ்வுகள், சமூகச்சீர்கேடுகள் என்பவற்றை கட்டிளமைப்பருவ மாணவர்களிடம் அதிகளவில் ஏற்படுத்துவனவாக செயற்படுகின்றன. இதனைக்குறைக்க வேண்டும்.

தவறான விளக்கங்களைப் பெறுகின்றபோது மாணவப்பருவமானது சீரழிக்கப்படுவதாக உள்ளது. கட்டிளமைப்பருவத்தில் மனித வாழ்வில் முக்கிய விருத்திகள் ஏற்படுவதுடன் இப்பருவமே வாழ்க்கையின் இலட்சியங்களினைத் தீர்மானிப்பதாக அமைகிறது. குறிப்பாக 15-18 வயதிற்குட்பட்டோர் தம் வாழ்வின் தீர்மானங்களை இலக்குகளைத் தெரிவு செய்யும் மனோநிலையை ஆவலைக்கொண்டிருக்கும் முக்கிய தருணத்தில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் அவர்களது விருத்தி மற்றும் அடைவிற்கு சாதகமாக பயன்படுத்துவது இன்றியமையாதது. உடலியல் விருத்தி, உளவியல் விருத்திஇ சமூக விருத்திஇ ஆளுமை விருத்தி என்பவற்றைக் கொண்ட இப்பருவமானது தவறான முறையில் தொழிநுட்ப பாவனையில் ஈடுபடுகின்ற போது தம் ஒட்டுமொத்த வாழ்வினையும் சமூக அந்தஸ்த்தினையும் கல்வியையும் இழக்கின்ற துர்பாக்கிய நிலை ஏற்படுவதுடன் கல்வி மீதான விருப்பும் இழக்கப்படுகின்றது. எனவே இந்த வாழ்வின் திருப்புமுனை பருவத்தினருக்கு வெகுசனத்தொடர்பு சாதனங்கள் குறித்த சரியான வழிகாட்டல்கள் விழிப்புணர்வுகள் என்பன இன்றியமையாதவனவாக இருப்பதுடன் விட்டில் பூச்சி நிலை நின்று மாணவர்களை வழிநடத்தும் அவதானிக்கும் செயற்படுத்தும் அவசியத்தினை இவ்வாய்வு வலியுறுத்தி நிற்கின்றது.

### 1.5 ஆய்வுநோக்கம் (objectives)

- பொது நோக்கம் : **(General Objective)**

வெகுசனதொடர்பு சாதனங்கள் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி அறிதல்.

- சிறப்பு நோக்கம் : **(Special Objective)**

1. மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்டபட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வெகுசனத்தொடர்பு சாதனங்களின் செல்வாக்கினை அறிதல்.
2. கற்றலில் வெகுசனத்தொடர்பு சாதனங்களை சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் எந்தளவிற்கு கையாளுகின்றனர் என்பதை மதிப்பிடல்.
3. வெகுசனத்தொடர்பு சாதனங்களினை கையாளத் தூண்டுகோலாக அமைகின்ற விடயங்களை இனங்காணல்.
4. சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்துவதில் வெகுசனத்தொடர்ப சாதனங்களின் முறையான பங்களிப்பினை வெளிக்கொணர்தல்

## 1.6 இலக்கியமீயாய்வு (review of literature)

சிரேஸ்ட இடைநிலை என்ற பிரிவினுள் அடங்கும் 15-18 வயதிற்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் கட்டிளமைப்பருவத்தினுள் உள்ளடங்குகின்றனர். இப்பருவம் புதுமைகளைக் கண்டறியத் தூண்டும் பருவம் என்பதாலும் எச்செயலையும் நிகழ்த்திப்பார்க்க வேண்டும் எனத் தூண்டுகின்ற உணர்வும் துடிப்பும் நிரம்பிய பருவம் என்பதனால் அவர்களை அறியாமலே வெகுசனத்தொடர்பு சாதனங்களிற்கு அடிமையாகின்றனர். இதனால் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் இவர்களை வெகுவாக ஆக்கிரமித்து அவர்களது நடைமுறையில் பெரும்மாற்றங்களை உண்டாக்குகின்றன. கல்வியில் ஆர்வமின்மை நேரவிரயம் பாடசாலைகளிலிருந்து இடைவிலகல் யதார்த்தத்தினை உணராமை சமூக சீர்கேடுகள் தவறான உறவுகளை ஏற்படுத்துதல் பிறழ்வான நடத்தை உளவியல் பாதிப்பு பொருளாதார பாதிப்பு எனப்பல இடர்களை எதிர்கொள்கின்றனர். (ஜெயராசா: 2000). உண்மையில் இணையம் உலகளாவிய அளவில் பல கணினி வலையமைப்புக்களின் இணைப்பாக இருப்பதுடன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து விடயங்களை அறிய உறுதுணையாக ஏற்பட்டது (அந்தர்ராஜன் : 2000).

வெகுசனத்தொடர்பு சாதனங்கள் குறிப்பாக இளம்பராயத்தினரைக் கவரும் நோக்கில் பல வசதிகளை அம்சங்களை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு பல்வேறுபட்ட பரிணாமங்களில் கவர்ச்சிகரமானதாகவும்இ விலை குறைவாகவும் இலகுவான கையாள்கைக்கு உட்படுத்தக்கூடியதாகவும் காணப்படுவதுடன் மிக இலகுவாக சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் வயதுப்பிரிவினரை தன்பால் ஈர்த்துக் கொள்ளக்கூடிய தன்மைகளையும் விளம்பர நிலையையும் கொண்டதாய் உள்ளன. (Alberto Parola Faculty of Education, University of Turin, Turin, ITALY https://files.eric.ed.gov/fulltext/EJ985671.pdf)

# 2.0 ஆய்வுமுறையியல் (METHODOLOGY)

## 2.1 ஆய்வு வடிவமைப்பு (Research Design)

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக வினாக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரிடம் கொடுத்துத் தரவுகள் பெறப்பட்டு அவை தொடர்பான முடிவுகள் தொகுக்கப்பட்டன. இவற்றுடன் அவதானமுறை, உரையாடல் முறைகள் மூலமும் தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வுக்கென மட்டக்களப்பு கல்வி வலயம் தெரிவு செய்யப்பட்டு அங்குள்ள IAB, IC பாடசாலைகளில் 04 மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இங்கு வெகுசன ஊடகப்பாவனை கல்விச்சமூகமயமாக்கலின் சிக்கல் நிலை தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள், சிரே'ட மாணவர்கள், பெற்றோர்கள் என அனைத்துத் தரப்பினரில் இருந்தும் அவரவர் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. ஆய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் பெறப்பட்ட முடிவுகள் அனைத்தும் பொதுமையாக்கம் செய்யப்பட்டன. அதன் மூலம் ஆய்வு தொடர்பான உண்மை நிலை வெளிக் கொண்டுவரப்பட்டது. இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன.

## 2.2 மாதிரித் தெரிவு. (Sampling Methods)

❖ **மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகள் பற்றிய விபரம்**

அட்டவணை 2.1

| வலயப் பிரிவுகள் | பாடசாலை வகை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | I AB | IC | வகை II | வகை III | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்முனை வடக்கு | 08 | 04 | 16 | 11 | 39 |
| ஏறாவூர்ப் பற்று | 01 | 03 | 03 | 02 | 09 |
| மண்முனைப் பற்று | 01 | 03 | 04 | 08 | 16 |

(வலயக்கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு - 2016)

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள 1AB மற்றும் IC பாடசாலைகள் 22 இல் 1AB பாடசாலை 02 மற்றும் 1C வகைப் பாடசாலைகள் 02 மொத்தமாக 04 பாடசாலைகள் ஆய்விற்கான மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்படன.

அட்டவணை 2.2

| பாடசாலை குறியீடு | ஆசிரியர்களின் எண்ணிக்கை | சிரேஷ்இடைநிலை மாணவர்களின் எண்ணிக்கை தரம் (10-13) |
|---|---|---|
| **A** | 75 | 440 |
| **B** | 50 | 317 |
| **C** | 46 | 286 |
| **D** | 32 | 305 |

(மூலம் : மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம்)

அட்டவணை 2.3

| குறியீடு | மாதிரி ஆசிரியர்கள் | மாதிரி மாணவர்கள் |
|---|---|---|
| **A** | 13 | 44 |
| **B** | 10 | 32 |
| **C** | 9 | 28 |
| **D** | 6 | 30 |


மேற்குறிப்பிட்ட 04 மாதிரிப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரிமூலம் ஆசிரியர்கள் 5 : 1 எனும் விகிதத்திலும் மாணவர்கள் 10 : 1 எனும் விகிதத்திலும் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இங்கு மொத்தமாக 4 பாடசாலை அதிபர்களும், 38 ஆசிரியர்களும், 134 மாணவர்களும் இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## 3.0 தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும்

இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது அதிபர், ஆசிரியர்கள், உயர் தர மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் விபரங்களைக் கொண்டமைவதால் இம் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் தரவு வடிவங்களைத் தீர்மானித்து பின்னர் தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப்பகுப்பாக்கம் செய்து Micro soft Excel-2013 மூலம் கிடைச் சலாகை வரைபுகளாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளதால் இவ் ஆய்வானது அளவை நிலை ஆய்வாகக் காணப்படுகின்றது.

### 3.1 தரவுப்பகுப்பாய்வு முடிவுகள். (Data Analysis)


3.1.1 பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் தன்மை




உரு 3.1

மாதிரியாகத் தெரிவான 38 ஆசிரியர்களிடம் பெற்ற தரவுளின் படி மாணவர்கள் வெகுசன தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதற்கு பாடசாலைகள் காரணமாக்கப்படுகின்றது. 57% மிக நன்று என்பதனை தெரிவு செய்திருப்பதால் பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் தன்மை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.


### 3.1.2 வீடுகளில் தகவல் தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாட்டு நடவடிக்கைகள்




உரு 3.2


மாதிரியாகத் தெரிவான 134 மாணவர்களிடம் பெற்ற தரவுளின் படி இன்று சாதாரணமாக அனைத்து வீடுகளிலும் வெகுசன தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் தன்மைகள் இதன் மூலம் நிறுபிக்கப்பட்டுள்ளது. 75% மிகக் நன்று என்பதனை தெரிவு செய்திருப்பதால் வெகுசன ஊடகங்களினை வீடுகளில் மாணவர்கள் பயன்படுத்துவதனை கண்காணிக்கும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

### 3.1.3 வெகுசன ஊடகங்களினை வீடுகளில் மாணவர்கள் பயன்படுத்துவதனை கண்காணிக்கும் தன்மை




மாதிரியாகத் தெரிவான 134 மாணவர்களின் பெற்றோர்களிடமும் இருந்து பெற்ற தரவுளின் படி இன்று வளர்ந்த பிள்ளைகள் வெகுசன தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதை கண்காணிக்கின்ற தன்மைகள் குறைவு இதன் மூலம் நிறுபிக்கப்பட்டுள்ளது. 75% மிகக் குறைவு என்பதனை தெரிவு செய்திருப்பதால் வெகுசன ஊடகங்களினை வீடுகளில் மாணவர்கள் பயன்படுத்துவதனை கண்காணிக்கும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.


### 3.1.4 சமூக வலைத்தயங்களில் மாணவர்களின் ஈடுபாடும் கணக்குகள் (accounts) வைத்திருக்கும் தன்மையும்




உரு 3.4

மாதிரியாகத் தெரிவான 134 மாணவர்களிடம் பெற்ற தரவுளின் படி இன்று அதிகமான பாடசாலை மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பது இதன் மூலம் நிறுபிக்கப்பட்டுள்ளது. 57% மிக அதிகம் என்பதனை தெரிவு செய்திருப'பதால் சமூக வலைத்தளங்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.


**3.1.5 தேடிக்கற்றல் செயன்முறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்காக இணையத்தள பாவனைகளை நாடவேண்டிய தேவை**




உரு 3.5

மாதிரியாகத் தெரிவான 38 ஆசிரியர்களிடம் பெற்ற தரவுளின் படி தேடிக்கற்றலுக்கு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. 80% மிக அதிகம் என்பதனை தெரிவு செய்திருப்பதால் இணையத்தளப் பாவனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.


**3.1.6 பாடசாலைகளிலும் வீடுகளிலும் இலவச wifi மற்றும் இணையத்தள பாலியல்சார் முகவரிகளுக்கான தடைகள் காணப்படும் முறைகள்.**




உரு 3.6 - i

85%ஆனவர்கள் இல்லை என்பதனை தெரிவு செய்திருப்பதால் இலவச wifi மற்றும் இணையத்தள பாலியல்சார் முகவரிகளுக்கான தடைகள் இருக்கின்ற தென்பது உறுதிப்படுத்தப்பட்டது.


**பாலியல் சார் முகவரிகளுக்கான தடை**




உரு 3.6 – ii

55 % ஆனவர்கள் இல்லை என்பதனை தெரிவு செய்திருப்பதால் பாலியல்சார் முகவரிகளுக்கான தடைகள் குறைவு எனவே இணைத்தளங்களை மாணவர்கள் பயன்படுத்துவது இலகுவாக்கப்பட்டமையை இதன் மூலம் அறிந்துகொள்ளாம்.

**3.1.7 பெற்றோருக்கான வெகுசன ஊடகங்களினை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வுகள் வழங்கப்படும் தன்மை**




உரு 3.7

மாதிரியாகத் தெரிவான 134 மாணவர்களிடம் பெற்ற தரவுளின் படி இன்று பிள்ளைகள் கல்வியில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர் தொடர்பாக விழிப்புணர்வுகள் வழங்கப்படுவது குறைவு என்பது இதன் மூலம் நிறூபிக்கப்பட்டுள்ளது. 60 % ஆனவர்கள் குறைவு என்பதனை தெரிவு செய்திருப்பதால் பெற்றோருக்கான வெகுசன ஊடகங்களினை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வுகள் வழங்கப்படும் தன்மை இதன் மூலம் அறிந்துகொள்ளாம்.

## 4.0 தீர்வுகளும், ஆலோசனைகளும். (Conclusions)

### 4.1 அதிபர்களுக்கான ஆலோசனைகள்

- நிபுணத்துவ ஆலோசனைகளின் பின் தவறான பகுதிகளை நீக்கி மாணவர்களின் பாவனைக்கு தொடர்புசாதனங்களை வழங்குதல்.
- மாணவர்கள் கற்பதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
- கட்டிளமைப்பருவத்தினரை உரிய கண்காணிப்புக்கு உடபடுத்தி இணையத்தளத்தை உபயோகிக்கப்ண்ணல்.
- பெற்றோர்களை அழைத்து மாணவர்களது ஊடகப்பாவனை தொடர்பாக அடிக்கடி கதைத்தல்.
- மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்திலான தலைமைத்துவப்பயிற்சிகளை வழங்குதல்.
- துறைசார்ந்த நிபுணர்களின் உதவியை பெற்று கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பாடசாலையை விருப்புக்குரிய இடமாக மாற்றுதல்.
- கைத்தொலைபேசிப் பாவனைக்கு பாடசாலைக்குள் தடைவிதித்தல்.

### 4.2 ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்

- உளவியல் மற்றும் வீட்டுச்சுழல் தொடர்பில் அறிந்திருத்தல்.
- வகுப்பறையில் மாணவர்களுக்கு தொழிநுட்பத்தினை மையமாகக் கொண்ட கற்பித்தல்களுக்கு ஊக்கமளிதல்
- தொடர்புசாதனங்களைக் கையாளப்பழக்குவதுடன் தவறான பகுதிகளை தடை செய்து கற்றலில் பிரயோகித்தல்

- மாணவர்கின் பெற்றோர்களோடு தொடர்பில் இருத்தல்.
- இப்பருவத்தினரின் பெற்றோருடன் சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி மாணவர்களது நடத்தைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.
- மாணவர்களுக்கு தவறான சமூகவலைத்தளங்களதல் உண்டாகும் பாதகங்களினை எடுத்துக்கூறி தன்னம்பிக்கையை ஏற்படுத்தல்
- வகுப்பறையில் கட்டிளமைப்பருவத்தினருக்கு சிறந்த விழுமியக்கருத்துக்களையும் நற்சிந்தனைகளையும் கற்பித்தல்மூலம் வழங்க வேண்டும்
- பிள்ளையின் வீட்டுச்சூழலை அவதானித்து பெற்றோர் நடத்தையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தல்.
- சமூக வலைத்தளப் பாவனையில் தான் முன்மாதிரியாக நடத்தல். வகுப்பறையில் கைத்தொலைபேசிப் பாவனையை நீக்கல்

**4.3 மாணவர்களுக்கான ஆலோசனைகள்**

- மாணவர்கள் கற்றலின் அவசியத்தினை உணர்ந்து கற்றல் செயற்பாட்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.
- தொடர்பாடல் சாதனங்களைக் கற்றலுக்கு மட்டும் பயன்படுத்துவதுடன் அதனுள் அடிமைப்படாது இருக்க பொழுதுபோக்குகளில் ஈடுபடல்.
- தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தாமாகவே அறிந்து அதனை வகுப்பாசிரியரிடம் எடுத்துக்கூற வேண்டும். ஆசிரியரால் தீர்க்க முடியாதவிடத்து வழிகாட்டல் ஆலோசனைச்சேவையாளரிடம் சிபாரிசு செய்யப்பட்டு தீர்வுகள் எட்டப்பட முடியும்.
- பாடசாலையில் சமூக வலைத்தயங்கள் மூலம் ஏற்படும் பிரச்சினைகளை தம்மால் இயன்ற றவரை குறைத்துக்கொள்ள அனைத்து மாணவர்களும் முன்வர வேண்டும்.
- பாடசாலைக்காலங்களில் கைத் தெலைபேசிகளை பயன்படுத்துவதனைக் குறைத்தல்.
- சமூக வலைத்தளங்களில் கணக்குகள் வைத்திருப்பதனை குறைத்தல்.

**4.4 பெற்றோர்களுக்கான ஆலோசனைகள்**

- தொடர்புசாதனப்பாவனையை கற்றலுக்காக மட்டுமே பிரயோகிக்கின்றனரா என அவதானித்தல் கண்காணித்தல்
- தம் பிள்ளைகளை எப்போதும் தம் கண்காணிப்பின் கீழ் வைத்துக்கொள்வதுடன் தேவையான விடயங்களிற்கு சுதந்திரம் வழங்குதல்.
- தவறான தொடர்புசாதனப்பாவனையை குறைத்துக் கொள்ள வழிகாட்டல் வழங்குதல்.
- பிள்ளைகளது தேவைகளை உணர்ந்து அத்தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும். பாலியல் சார் முகவரிகளுக்கு தடை விதித்தல்.
- ஆசிரியர்களுடன் அதிக தொடர்பினைத் தமது பிள்ளைகள் சார்ந்து கொண்டிருக்க வேண்டும்.
- பிள்ளைகள் எங்கே செல்கின்றனர் யாருடன் பேசுகின்றனர் போன்ற அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்ய வேண்டும்.
- தம் பிள்ளைகளின் தவறான நடத்தை இனங்காணப்படின் உரிய பரிகார முயற்சிகளை ஆலோசகர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
- படிப்படியாகப் பிள்ளைகளுக்கு சுதந்திரம் வழங்குவதுடன் அதன் அளவு தொடர்பில் கவனமாயிருத்தல் வேண்டும்.
- வீட்டில் பொதுவான இடத்தில் இணையத்தளப் பாவனைகளை நடாத்த அனுமதி வழங்கள்.
- கைத்தொலைபேசிகளை முடியுமாவரை கற்கும் பிள்ளைகளிடம் இருந்து நீக்கிவிடல்.
- உரிய மேற்பார்வையுடன் வெகுசன ஊடகங்களின் பாவனையை கற்றலில் இலகுபடுத்தல்

## 5.0 ஆய்வுக்கான விதந்துரைப்புக்கள்

வெகுசனத்தொடர்பு சாதனங்கள் என்ற வகைப்பாட்டினூடே கற்றல் செயற்பாட்டிற்கு ஏற்ப நிலைப்பாட்டில் வரம்புமீறிய செயற்பாட்டினால் மாணவர்களின் விழுமிய நடத்தைக்கோலங்கள் மற்றும் கல்வியின் தர நிலையில் பின்னடைவினை ஏற்படுத்துகின்றன. எனவே வெகுசன தொடர்பு சாதனங்களில் பாவனையை பாடசாலைகளிலும் வீடுகளிலும் தவிர்க்க முடியாது ஆனால் அவற்றினை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு மேற்பார்வை செய்யலாம். இதனால் மாணவர்களின் தொழிநுட்ப பாவனையும் அதிபரிக்கும் அதேவேளை தவறான வழிகளில் செல்வதும் தடுக்கப்படும். இதற்கான செயற்படிவங்களை

மேற்கூறப்பட்ட ஆலோசனைகள் மூலம் **அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனும் ரீதியில் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளது.**
தவறான விளக்கங்களைப் பெறுகின்றபோது மாணவப்பருவமானது சீரழிக்கப்படுவதாக உள்ளது. கட்டிளமைப்பருவத்தில் மனித வாழ்வில் முக்கிய விருத்திகள் ஏற்படுவதுடன் இப்பருவமே வாழ்க்கையின் இலட்சியங்களினைத் தீர்மானிப்பதாக அமைகிறது. குறிப்பாக 15-18 வயதிற்குட்பட்டோர் தம் வாழ்வின் தீர்மானங்களை இலக்குகளைத் தெரிவு செய்யும் மனோநிலையை ஆவலைக்கொண்டிருக்கும் முக்கிய தருணத்தில் வெகுசனத்தொடர்பு சாதனங்கள் அவர்களது விருத்தி மற்றும் அடைவிற்கு சாதகமாக பயன்படுத்துவது இன்றியமையாதது.
உடலியல் விருத்தி, உளவியல் விருத்திஇ சமூக விருத்தி, ஆளுமை விருத்தி என்பவற்றைக் கொண்ட இப்பருவமானது தவறான முறையில் தொழிநுட்ப பாவனையில் ஈடுபடுகின்ற போது தம் ஒட்டுமொத்த வாழ்வினையும் சமூக அந்தஸ்த்தினையும் கல்வியையும் இழக்கின்ற துர்பாக்கிய நிலை ஏற்படுவதுடன் கல்வி மீதான விருப்பும் இழக்கப்படுகின்றது. எனவே இந்த வாழ்வின் திருப்புமுனை பருவத்தினருக்கு வெகுசனத்தொடர்பு சாதனங்கள் குறித்த சரியான வழிகாட்டல்கள் விழிப்புணர்வுகள் என்பன இன்றியமையாதவனவாக இருப்பதுடன் விட்டில் மாணவர்களை வழிநடத்தவும், அவதானிக்கவும், செயற்படுத்தவும் அவசியத்தினை இவ்வாய்வு வலியுறுத்தி நிற்கின்றது.

## 6.0 சராம்சம்

மாணவர்களின் தவறான தொடர்புகள் அதிகமான தொடர்புசாதனப்பாவனை காரணமாக உளவியல் சார் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுவதனால் இவர்களுக்கு சிறந்த தீர்வினை ஆசிரியர்கள் பெற்றோர்கள் அதிபர் போன்றோர் பெற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நெறிபிறழ்வான நடத்தையை உடையவர்களாக கற்றலில் பாதிப்படையலாம். இதன்படி அதிகரித்துள்ள தொடர்புசாதனப் பயன்பாடானது சிரேஸ்ட இடைநிலையினரின் கற்றல் மற்றும் நடத்தையில் தாக்கத்தினைச் செலுத்துவதால உள்ளமை கண்டறியப்பட்டது.
தெரிவுப்பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலையினர் தொடர்புசாதன தாக்கங்களினால் விசேட வழிகாட்டல் ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டது. மேலும் பெற்றோர்கள் தமது பங்களிப்பினை அறிந்து கொண்டு சிறப்புற செயற்பட வேண்டும். கற்றலுக்கென தொடர்புசாதனங்களை பிள்ளைகள் பயன்படுத்தினாலும் அதன் எல்லை தொடர்பில் அறிந்திருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் ஆகியோரின் வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளின் படி நோக்கின் இப்பாடசாலைகளில் கற்கும் சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் வெகுசனத்தொடர்புசாதனப்பாவனையின் காரணமாக கற்றலிலும் நடத்தையிலும் தாக்கங்களை உள நெருக்கீடுகளையும் எதிர்கொள்கின்றமை ஆய்வின் முடிவாகப் பெறப்பட்டுள்ளது. எனவே சிரேஸ்ட இடைநிலையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு தம்மால் இயன்ற வழிகாட்டலினை வழங்க வேண்டியது அனைவரதும் குறிப்பாக அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களின் பொறுப்பாகும். இதனால் சிறந்த தலைமுறையினை உருவாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

### 8.0 உசாத்துணைகள்


1. தனபாலன். பா,(2008), **நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. தனபாலன், பா. (2002) **“கல்வியும் நவீனத்துவமும்”** பூபாலசிங்கம் புத்தககாலை, கொழும்பு.
3. நிக்கலஸ், ஜெ. 2009)**“நவீன கல்விச் செல்நெறிகளின் போக்கு”** ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
4. Selck R. sirin, (2004 mass medias education” Newyourk university publication.
5. http://econweb.ucsd.edu/~gdahl/mass media/children-and-EITC.pdf
6. https://www.msd.govt.nz/documents/about-msd-and-our-work/publicationsresources/research/influence-parental-income/influence-of-parental-income.pdf
7. https://www.jrf.org.uk/sites/default/files/jrf/migrated/files/secoundary students.pdf
8. https://core.ac.uk/download/pdf/phone uses4160412.pdf